உ

சிவமயம்



# காரைநகர் பண்டத்தரிப்பான்புலமுறை சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரசுவாமி

# திருப்பள்ளியெழுச்சியும், திருப்பதிகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசிச்செய்தி

சிவகாமி சமேத ஸ்ரீ ஞான நாடராசப் பெருமான் காரையம்பதி பண்டத்தரிப்பான்புலம் தேவஸ்தான அதீனகர்த்தா சி. சிவபாலன், சி. சிவநேசன் அவர்களுக்கும் சிவசமயசீரியர் சி. பொ. கோபால் அவர்களுக்கும் சிவனருளுடன் அருள் ஆசியுரை. சிவசமயசீரியர்

2012ஆம் ஆண்டில் சிவனருளுடன் தாங்கள் யாத்தருளிய

1. சிவகாமி அம்மை திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் 13
2. சிவகாமி அம்மை பதிகம் முத்திரைக் கவியுடன் 11 பாடல்கள், பத உரை, பொருள் உரை இரு நூல்களிலும் சிவசக்தி திருவருள் செறிவுற்றிருந் துள்ளன.

முத்தி மார்க்கத்தில் ஈடுபாடு உடையோர் பிறவாப் பேரின்பம் பெற்று சிவன் பாத கமலங்களின் கீழ் என்றும் பேரின்பம் பெறுவீர் களாக என ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ. சிவக்கொழுந்து
சிவதேசிக ஞானப்பிரகாச
பாரமச்சாரிய சுவாமிகள்
3ம் குருமஹா சந்நிதானம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதீன கர்த்தாவின் ஆசிச்செய்தி

கந்தப்பர் பரம்பரையில் ஒருவராய் தோன்றி, சிவகாமி அம்மையாரையும், ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானையும், தனது உபாசனா மூர்த்திகளாய் கொண்டு, காரைநகர் பண்டத்தரிப்பான் புலத்துறை சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம்(ம்)மாகிய (உபசிதம்பர(ம்)த்தில், தனது சிறுபிராயத்திலிருந்து பல்வகைப் பணிகளைச் செய்து, சிவசமய சீரியராய், பண்ணோடிசையைப் பொருள் விளங்க ஓதியும் சிவானந்தத்தில் திளைத்தும், சிவ வழிபாட்டு நெறிகளில் கண்ணுங் கருத்துமாய்ச் செயல்படுபவராய், புராணகராய், புலவராய், வர்ணனை வித்தகராய், விளங்கிய எங்கள் சித்தப்பா, பொன். கோபால் அவர்கள் தேவஸ்தான வெளியீட்டு, 11வது 12வது பாடல்களாக (சிவகாமி அம்மை திருபள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி) பாடலையும், (சிவகாமி அம்பாள் பதிகத்தையும் தனது 11ஆவதும், 12ஆவதும், ஆக ஆக்கி, தேவஸ்தான வெளியீடாக வெளியிடுவதையிட்டு அன்னாருக்கு எங்கள் குலதெய்வமாகிய சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர சுவாமிகளின் திருவருள் கிட்டவும், மேலும் மேலும் புலமைத் தன்மை பெருகவும், நல்லாயுள், நல்லாரோக்கியம் பெற வேண்டியும், அம்மை அப்பரைப் பணிந்து எங்கள்ஆசியுரையை நிறைவு செய்கின்றோம்.

ஆதீன கர்த்தாக்கள்
சி. சிவபாலன்
சி. சிவனேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவகாமி துணை

# திருப்பள்ளியெழுச்சி வாழ்த்துரை

பண்டத்தரிப்பான் புலத்தில் பரந்துறையும் அன்னை சிவகாமியினதும் சிதம்பரேஸ்வரினதும் பாதார விந்தங்களை வணங்கி, ஞானத்தைத் தரும் ஞானாம்பிகையின் மலரடி போற்றி சிவகாமி அம்மை திருப்பள்ளி எழுச்சிக்கான வாழ்த்துரையை வழங்கலாமென தொடர் கிறேன்.

இதன் நூலாசிரியர் பற்றி சொல்வதா னால்; திரு பொன் கோபால் அவர்கள் எனது உறவினர். அவர் ஓர் சிறந்த சிவபக்தர். தன் முன்னோர் காலங்களிலேயே சிறுவயதில் இருந்து எங்கள் அம்மை அப்பனை பூசித்தும், சேவித்தும், சங்கு முழங்கியும், திருமுறைகள் ஓதியும், பாடியும், பரவியும் வளர்ந்தவர் வாழ்ந்தவர். அந்தவகையில் இன்று அவருக்கு அன்னையின் ஞானம் கைவரப் பெற்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால், சிவகாமி சிதம்பரேஸ்வரர் பெயரிலும் வேறு தெய்வங்களின் பெயரிலும் பல பதிகங்கள் வெளியிட்டுள்ளார். அவை எல்லாம் பொருள் பொதிந்தவை அருள் நிறைந்தவை எனவே அவர் புலமையும் திறமையும் நிறைந்தவர். இதனால் இவருக்கு பல பட்டங்கள் கிடைத்துள்ளன. கௌரவிப்புக்கள் நடந்துள்ளன. அவையெல்லாம் அன்னையின் அருள் என தன்னடக்கத்துடன் நினைவு கூர்வார். படைப்பாளி என்பவன் வாழும் காலத்தில் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற் கமைய இவருக்கு அந்த கடாட்சம் கிடைத் துள்ளது.

ஒவ்வொரு கோவில்களிலும் மூலமூர்த்தங் களின் பெயரால் திருப்பள்ளியெழுச்சி பாடல் கள் இயற்றப்பெற்று அதிகாலை வேளையில் ஒலிபரப்புகிறார்கள். அது எங்கள் கோவிலில் நிறைவேறுவதற்கு தற்போது தான் நேரம் வந்துள்ளது போலும். "காரணம் இல்லாமல் காரியம் இல்லை" இது உருவான நிகழ்வைப் பாருங்கள் 2012ம் ஆண்டு யூன் 17ஆம் திகதி எங்கள் கோவில் மகோற்சவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவஜாரோகண நாள் அன்று மகோற்சவம் நிகழ்த்திக் கொண்டிருந்த ஸ்ரீதாணு வாசுதேவச் சிவாச்சாரியார் பக்தர்களுக்கு உரை நிகழ்த் திக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவர் **சிவகாமி அம்பாள் தேவஸ்தானத்திற்கும் திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் இயற்ற வேண்டும்** என்பதையும் உரை செய்து கொண்டிருந்தார். அப்போது நானும் அங்கே பிரசன்னமாயிருந் தமையினால் அந்த வரிகள் மீண்டும் மீண்டும் என் மனதில் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தன அந்த நேரம் கோவிலின் தர்மகர்த்தா திரு சிவபாலன் அவர்களை சந்தித்து குருக்கள் ஐயா சொல்வதைக் கேட்டீர்களா? எங்கள் கோவிலுக்கு கண்டிப்பாக திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் வேண்டும். அதனை கோபால் மாமா இருக்கும் போதே இயற்றுவியுங்கள் நல்ல குரல் வளம் உள்ளவர்களைக் கொண்டு பாடுவியுங்கள் என்று சொன்னேன். அவரும் ஆமாம் என்று சொன்னார். பின்னர் நாங்கள் இதுபற்றி சிறிது நேரம் ஆலோசனை பண்ணி இருந்தோம். அவையெல்லம் ஒன்று கூடி 1 3 பாடல்களைக் கொண்ட திருப்பள்ளியெழுச்சி தொகுப்பாக இன்று மலர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்களை இயற்றுவதற்கு திரு. பொன் கோபால் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது. பதின்மூன்று பாடல் களும் அருளோடு பொருள் நிறைந்தவை. அத்துடன் அன்னையின் அருள் கடாட்சத்தை அள்ளி அள்ளி தருபவையாக அமைந்திருக் கின்றன. எங்கள் அன்னையை, சிவகாமி அம்மையை அதிகாலை வேளையில் விழித்து அழைத்து பாடி என்றென்றும் நல்ல பொழுதாக நம் பொழுது அமைய வேண்டும் அத்தனை பாடல்களையும் பாடி நாம் எல்லோரும் அன்னையின் அருள் கடாட்சத்தை பெறுவோ மாக.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகை மெல்லாம்"

திருமதி கலாநிதி நடேசலிங்கம்
77/2 மேபீள் வீதி
கொழும்பு B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுரை

மூலமூர்த்தியின் நாமத்தாலும், தல வரலாற்றாலும், தீர்த்தத்தினாலும் "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொடங்கினற்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என தாயுமானசுவாமிகள் திருவாய் மலர்ந்தது போன்று மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்ததுடன் "கந்தன் வீடு எங்கே" என சேது எனும் மாதுக்கு தன் வருகையைச் கூறிக் காட்டித் தானே பண்டத்தரிப்பான்புலம் வந்துறைந்ததுமாகிய, மேற்காட்டிய நிகழ்வுகளால் தில்லைச் சிதம் பரத்துடன் பின்னிப் பிணைந்து ஒன்றுபட்டு "உபசிதம்பரமென" விளங்கும் காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்மையுட னுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் திருக்கோவிலான ஆயாதி சிற்பரகசியமெனும் சிற்பசாஸ்திரத்தில் கூறப்பட்ட சிறீ கோயில் அமைப்பைக் கொண்ட திருக்கோயிலுமாகும். (சிறீ = திரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பதிவாக்கியமான திருமுறைகளுடன் அதில் அடங்கும் திருவாசகம் தரும் திருப்பொன்னூஞ்சல் திருப்பள்ளியெழுச்சி என்பன பாடி திருவிழாக்காலங்களில் சுவாமி எழுந்தருளல் செய்வது மரபு.

அவ்வண்ணமிருந்தும் அம்மை அப்பன் மீது கொண்ட ஆராத காதலால் கலை ஞானசுரபி போன்ற பல பட்டங்களையுடைய பெரியார் பொன் கோபால் அவர்கள் சிவன் மீதும் அம்பாள் மீதும் ஏனைய தெய்வங்கள் மீதும், பல பக்திப் பாசுரங்களைப் பாடி பாமாலை சூட்டியுள்ளார். அவ்வகையில் தற்போது சிவகாமி அம்மை திருப்பள்ளி எழுச்சியையும் ஆக்கியுள்ளார்.

இறைவனைத் துயிலெழுப்பல் பாட்டாதலால் திருப்பள்ளி எழுச்சி எனப்பட்டது. இதற்கான நுண்பொருள், தன் ஆத்மனின் சுயவடிவத்தை உள்ளபடி அறியவிடாது இருள் போல் மறைந்திருக்கும் தடையை நீக்கி ஆத்மதரிசனம் பெற்று இறைத் தன்மையை பெறுதல் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் அவர் பாடிய 1ம் பாடல் எல்லாம் நீயே, எனக்கொன்றும் தெரியாது எனும் நிலையில் பூரண சரணாகதி நிலைக்கு வந்து, அச்சரணாகதியின் விளைவால் மன இருள் குறைந்து புலர்வுகாலம் போல் தன் உளத்திலும் புலர்வு நிலை வந்து பின் ஞானோதயமான ஒளி உருவாகி புனிதராகி, திருவருட்பயனில் "தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" சூரியனை அதன் ஒளிக்கதிர் மூலம் நாம் காணுவது போன்று சிவத்தின் ஆற்றலான திருவட்சத்தி துணைகொண்டு சிவத்தைக் காண முயற்சிப்பதும்.

திருவருட்சத்தி அடுத்ததின் விளைவாக இருளும் ஒளியும் கலந்த புலரிக்காலம் உருவா வதையும் தன் உள்ளத்திலேயும் குறை எது நிறை எது எனக்கண்டு பகுத்தறிந்து தெளிவாகி சரணாகதித் தன்மையால் இறை சித்தமே தன் சித்தமாகி "உளமதிலேற்று அடியேற் கருளே" எனும் அடிகளாலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை சித்தம் வந்தபின் ஓங்காரநாதம் கேட்கும் இயல்பை "மணியொலி செவிப்புக... பதமலர் நினைந்தோம்" வரையான வரிக ளால் அழுத்தமாகக் காட்டியும், யோகிகள் ஞானிகள் நினைப்பதுபோல் நாமும் நினைந் தோம். ஆனால் விடயம் ஒன்றாகவும் அவ்விட யத்தை அனுபவிக்கும் விதம் வெவ்வேறாகவும் இருப்பதை பல நிலைகளை 3ம் பாடலால் எடுத்துக் காட்டியும், இறைசித்தம் வந்தெய்திய பின் இறைசெயலல்லாது தன்செயலற்று தன் வசமிழந்து" விரும்பித்தொழுமடியார் விழிநீர் மல்கி... மொழிதடுமாறியென பட்டார் பிரான் கூறியது போன்று பலதரப்பக்குவ நிலைகளைக் காண்பித்து, ஐந்தாம் பாடலில் பதிவாக்கிய மெனக் கூறப்படும் சிவபிரானுடைய திருவாக் காகிய வேதங்கள் மட்டுமன்றி சிவமாம் தன்மை பெற்ற சமயாச்சாரியார், சந்தானச் சாரியார் போன்றோருடைய திருமுறைப் பாடல்களை பொருளுணர்ந்து ஓதப்படும் போது, பாடுபவரை சிவமாக்கும் தன்மை பெற்றதாலும் தமிழ் வேதமாதலாலும் "தண் தமிழ் திருமுறை ஓதுவார் வந்தார் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவளம் குரல்வளம் நிறைந்த சூழலுடைய வர்கள் செறிந்த பண்ணொன்ற இசைபாடும் அடியாரையும் சூழல் சுற்றாடலையும் எடுத்துக் காட்டி.

தெளிவென்பது ஒன்றுண்டாயின் குழப்ப மென்னும் ஒன்றும் உண்டு. ஆலயம் வந்தவுடன் தெளிவும் வெளியில் சென்றவுடன் குளப்பமும் ஏற்படுவது பாசி நிறைந்த நீரில் கல்லைப்போட, கல் நீருள் செல்லுமளவும் பாசிவிலகி, பின் மூடுதல்போல உலக விடயம் பற்றிக் கொள்வதை 6ம் பாடலில் 1ம், 2ம் வரிகளாலும், குளப்பமுமில்லை தெளிவு மில்லை என நின்மலமக அடுத்தது காடும் பளிங்கு போன்று (கண்ணாடி) சித்தர்களின் மனமிருக்கும். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் பரந்த விரிந்த நோக்கில் உலகுக்கெடுத்துக்கூறிய கூற்றுக்களை "சித்தர் சொல்வழி சிறந்து நாம் வந்தோம் என்றும், வல்லமைகள் பெற வந்தோமென்றும், வேண்டத்தக்கதறிவோய் நீ........... வேண்டும் பரிசொன்றுண்டெனில் அதுவும் உன்றன் விருப்பன்றே என திருவாதவூரடிகள் கூறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று மிகவும் உச்சநிலைக்கு ஏறி பாடலாசிரியர் அது வேண்டும் இது வேண்டும் எனும் மன ஆசையின் வேகத்தைக் கெடுத்து உன் விருப்பமே என் விருப்பம் எனக்கூறுவது போன்று "திருகலை நீக்கியுன் திருக்கொடை யருள" என விளம்பி "அடியவர்கள் பல திறப் பட்டவர்கள். பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர் புத்தடியோம் புன்மை தீர்தாட் கொண்டாற் பொல்லாதோ" என திருவெம்பாவை முளங்கும். பழவடியர் புத்தடியர் இருவரிலும் பழஅடியவர் இறைவனான சத்தியத்தை உண்மையைப் பலகாலும் மனதில் பாவித்து பாவித்து குற்றமற்றவனாகிறான். அதன் விளைவாகப் பற்றுகள் நீங்கி பற்றற்ற இறைவனுடைய தன்மைகள் கைவரப் பெறுதலால் அவர்களுடைய வேண்டுதல் நிறைவேற்றப்படுகின்றது. திகைப்பும் முன் வினைப்பயனால் ஏற்படலாம். (உ+ம் நால்வர் தொடக்கம் நல்லோர் வரை) 7ம் பாடலின் 5ம் 6ம் வரிகளால் குற்றமற்றவர்களும் வினையின் பயனை அனுபவிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனில் இருந்து பிழைப்பதற்கு பிரார்த்தனையே வழி எனக் கூறி

9ம் பாட்டில் சிவமும் சக்தியும் வேறு இல்லை சேய்க்குத் தாய் இவர் உன் அப்பா எனக் காட்டும் மரபில் பாடலாசிரியரும் தாயிடம் சென்று தந்தையைக் காண்பதையும்

10ம் பாட்டில் எல்லாம் வல்லவர் இறைவர் என்பதை கொடிதென வந்தகரிதனையும் கடிதென வந்த புலிதனையும் உரித்து அதன் தோலைப் போர்த்திய வீரத்திறத்தைக் காட்டி

எத்திறம் நின்றான் ஈசன் அத்திறனும் அவளும் நிற்பாள் சிவஞானசித்தியார் கூறும். சிவன் கோரவடிவம் கொண்டால் சக்தியும் கோரவடிவம் கொள்ளும் யோக போக வடிவங்களும் அத்தகையதே.

11ம் பாடலில் 1ம் 2ம் வரிகளிலும் சிவனின் அனுமதியுடன் சம்பந்தருக்கு பால் கொடுத்த நிலையை 4ம் நிலையாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் உலகினுக்கு அபிராமி அந்தாதி தருவதற்காக பட்டருக்கு இடுக்கண் ஏற்படுத்தியும், தாம் பண்டத்தரிப்பான்புலம் வந்துறைவதற்காக கந்தப்பருக்கு மகவிலாக் குறையை வைத்தும் "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய் என அப்பரடிகள் கூறியது போன்ற வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத இறைவன் அவரவர் வேண்டுதலில் தக்கதை நிறைவேற்றி அவரவர்க்கு தகாதவைகளை நிறுத்தியும் சிவஞானமாகிய தன் திருவடித் தாமரையை எம் தலைமேல் சூட்ட எம் விரிதலையான (விரிதலையேனை விடுதி கண்டாய்") அகங்காரமமகாரம் நிறைந்த தலைகளை விரிந்து பரந்து விசுவரூபம் கொள்ள விடாது சிரங்கூப்பி தாழ்த்தி மெய் பணிவோடு வணங்க வைத்தாய் அதனால் வணங்க வந்தோம் எனும் கருத்தமைய இப்போது சிரம் கூப்பியுன் பதியில் நாமுற்றோரும் சிவகாமியே பள்ளி எழுந்தருளாயே என சிவஞானமாகிய திருவடி பதிதலை இறுதியாக எடுத்துக்காட்டி பாடலை நிறைவு செய்கிறார். இவருடைய புலமை, பத்தி, ஆற்றல் மென்மேலும் சிறந்து சிவப்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர என்னை ஆளுடையான் ஆளுடையாள் திருப்பாதங்களைப் பணிந்து அவர் இட்ட அன்புக்கட்டளைக்கிணங்க அடியேன் இப்பாடல் களை ஆய்வு செய்வதற்கான சிந்தனையைத் தந்தருளிய உபசிதம்பரம் சிவகாமியுடனுறை சிதம்பரேஸ்வருக்கும் ஏனைய பரிவார மூர்த்தி களுக்கும் நன்றியும் வணக்கமும் செலுத்தி எனது ஆய்வை நிறைவு செய்கிறேன்.

**அடியார்கடியவன்**
கலாபூசணம் சைவசித்தாந்தச் செம்மல்
**மா. சிவஞானம்**
**வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசிச்செய்தி

சிவகாமி சமேத ஸ்ரீ ஞான நடராசப் பெருமான் காரையம்பதி பண்டத்தரிப்பான்புலம் தேவஸ்தான அதீனகர்த்தா சி. சிவபாலன், சி. சிவநேசன் அவர்களுக்கும் சிவசமயசீரியர் ச. பொ. கோபால் அவர்களுக்கும் சிவனருளுடன் அருள் ஆசியுரை.

2012ஆம் ஆண்டில் சிவனருளுடன் தாங்கள் யாத்தருளிய

3. சிவகாமி அம்மை திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் 13

4. சிவகாமி அம்மை பதிகம் முத்திரைக் கவியுடன் 11 பாடல்கள், பத உரை, பொருள் உரை இரு நூல்களிலும் சிவசக்தி திருவருள் செறிவுற்றிருந்துள்ளன.

முத்தி மார்க்கத்தில் ஈடுபாடு உடையோர் பிறவாப் பேரின்பம் பெற்று சிவன் பாத கமலங்களின் கீழ் என்றும் பேரின்பம் பெறுவீர் களாக என ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ. சிவக்கொழுந்து
சிவதேசிக ஞானப்பிரகாச
பாரமச்சாரிய சுவாமிகள்
3ம் குருமஹா சந்நிதானம்
வவுனியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவகாமி துணை

கலைவாணி துணை

# சிவகாமி அம்மை பதிகம் ஆய்வுரை

எல்லாம் வல்ல அம்மை அப்பன் திருத்தாள் போற்றி, ஆயகலைகள் அறுபத்து நான்கையும் அள்ளித்தரும் கலைவாணியின் பாதமலர் பணிந்து; சிவகாமி அம்மை பதிகம் எனும் நூலின் ஆய்வுரையை சிறியேனாகிய நான் தொடர்கிறேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்கிறது திருமூலர் திருமந்திரம். அந்த வகையில் திரு பொன் கோபால் அவர்களும் சிவகாமி அம்மைக்கு தேன் சுவைத் தமிழில் பாடல்கள் அமைந்துள்ளார். அப்பாடல்களின் பொருளை சற்றே நோக்குவொமேயானால்.

அவர் தம் முதலாவது பாடலில் எங்கள் முன்னோர் குழந்தை பாக்கியம் இல்லாத குறையை தீர்க்க சிதம்பரம் சென்று குழந்தை வரம் கேட்டு அங்கு தங்கிய போது அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் கனாவில் இறைவன் தோன்றி கந்தப்ப! "குழந்தை வரம் தந்தேன் நின்னோடு நானும் வந்தேன்" என்னும் அசரீரியோடு கோவில் ஆரம்பமான வரலாற்றை விபரிக்கின்றன. இரண்டாம், நான்காம், ஐந்தாம் பாடல்களில் எங்கள் கர்மவினையை நீக்கி அருள்கடாட் சத்தை தர வேண்டுமென வேண்டுவது நெஞ்சை உருக்குபவையாக உள்ளன. மூன்றாவது பாடல் அன்னை அவுணர்களை வதம் செய்து பக்தர்களை காத்த பெருமை உரைக்கப்பெற்றிருக்கிறது.

ஆறாவது பாடலில் தேவியின் திருநாமங் களின் எதுகை மோனையுடன் ஒன்றுக் கொன்று இணைந்து திருநாமங்களின் மகிமைகளை எடுத்தியம்புகின்றன. ஏழாவது பாடல் நாள்கள் கோள்கள் தம்மை ஒன்றும் செய்யா. ஊழ்வினை துரத்தப்படும் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. இதையே அப்பர் பெருமானும்,

அல்லல் என் செய்யும் அருவினை என் செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செய்யும்
தில்லை அம்பலம் சிற்றம்பலவானர்க்கு
எல்லை இல்லாத அடிமை பூண்டேனுக்கு.

என்று பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் பாடல் பிட்சாடனமூர்த்தியின் வடிவத்தை நினைவு கூர்ந்து அந்த உற்சவத்தை மனக்கண்ணில் நிழலாடச் செய்கின்றன. யாழ் வைத்தீஸ்வரன் கோவில், கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவில் முனீஸ்வரம் முன்னை நாத சுவாமிகளில் காணக் கிடைத்த காட்சிகளை எனக்கு நினைவுபடுத்துகின்றன. அந்த உற்சவம் கூட காலப்போக்கில் நம் கோவிலிலும் நிகழ வேண்டும் அத்தோடு 8ம்பாடல் மனித வாழ்வின் இறுதி நேரத்தில் உயிர் பிரியும் வேளையில் மரண பயம் இல்லாதிருக்க வேண்டுமென இறைவியை வேண்டுகிறார்.

அவ்வண்ணமே ஒவ்வொரு பாடலிலும் ஆசை, கோபம், பொறாமை பற்றிக் கூறியவர், நிறைவுப் பாடலில் மீண்டும் சிதம்பரத்தில் இருந்து வந்த சிவகாமி, பண்டத்தரிப்பான் புலத்தில் வந்து அமர்ந்த கதையை வெளிப்படுத்துகின்றார்.

இப்படியாக அவர் பாடல்களை இயற்றி ருப்பது நாம் வாழுங்காலத்தில் பெற்ற வரப் பிரசாதமென்றே கூற வேண்டும். அன்னையின் அருள்பெற இப்பாடல்களைப் பாடி அவளுக்கு சமர்ப்பணம் செய்வோமாக. என்னைப் பொறுத்த வரை காஞ்சி காமாட்சி அம்மன் விருத்தங் களையே சிவகாமி என நினைத்து ஓதுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வழக்கம். எங்கள் ஊர் எங்கள் கோவில் அன்னையின் பெயரால் தற்பொழுது இயற்றி யுள்ளமை பாராட்டத்தக்கது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ என்பது போல் பாடுவித்தால் பொன் கோபால் அவர்கள் பாடாரோ?

என்று இவை எல்லாம் எங்கள் அன்னை சிவகாமியின் அருள்தான் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

**திருமதி கலாநிதி நடேசலிங்கம்**
**77/2 மேபீள் வீதி**
**கொழும்பு 13**

**11-09-2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சிறியேன் எனது இளம் வயது முதல் எனது பெரிய தந்தையார் சிவகாமி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா, சண்முகம்கந்தையா அவர்களின் ஊக்குவிப்பினால், எம் தாய் சிவகாமி சுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர சுவாமி தேவஸ்தான வழிபாட்டிலும், திருமுறைகள் ஓதுதல், புராணம் வாசித்தல், எனப் பல வழிகளிலும் ஈடுபட்டு வந்த காரணத்தினாலும், பல புராண, இதிகாச, இந்து மத சம்பந்தமான விதிமுறைகளடங்கிய தமிழ் நூல்களை வாசித்து அறிந்த காரணத்தினாலும், என்னாலான கருமங்களை இயற்றி வந்தேன். இந்நிலையில் அம்மை அப்பன் எண்ணத்தின்படி எனது கனவிலும், சில அடியார்களின் எண்ணங்களிலுந் தோன்ற வைத்துந் தெரியப் படுத்திய எண்ணங்களினால் தேவஸ்தான வெளியீடாக நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளேன். இப்போது, சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர சுவாமி தேவஸ்தான, ஆதீனகர்த்தா சி. சிவபாலன், மற்றும் திருமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி நடேசலிங்கம் அவர்களின் வேண்டுதலை ஏற்று ஷ இரு நூல்களையும் ஆக்கியுள்ளேன். எனவே, சைவ நூல்களை அடியார்கள் அன்பர்கள் படித்துணர்ந்து, இன்புற்று இறை நாட்டத்தில் திளைத்து உய்தியடை வேண்டுகின்றேன். "ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே! என்கின்ற அப்பர் சுவாமிகளின் வாக்கிற்கமையவும்" எல்லலாஞ் சிவன் செயலே!" என்கின்ற காரணத்தினாலும் எச்செயலும் இடம்பெறு கின்றன. ஆகவே, யாம் அவ்வழி செல்லாது, தவ வழி இயங்கி, நல்லன நினைந்து, நல்லன பேசி, நல்லன செய்து இறையடி போற்றி நற்பேறு பெறவேண்டும். "தக்கார் தகவிலார் என்பது அவர் தம் எச்சத்தாற் காணப்படும்" என்கின்ற வள்ளுவர் வாக்கை மனதின் கொண்டு நல்வாழ்வு வாழ்வோமாக!

**சிவகாமியின் செல்வன்**
**காரையூர் பொன். கோபால்**
**நூலாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி அம்மை திருப்பள்ளியெழுச்சி

## பாடல் 01

போற்றியெ ம்புகலிட மாகிய தாயே!
விடியலைக் காட்டின குக்குட வோசை
போற்றியெ ம்புன்மைக ள்போக்கி டுந்தாயே
புலவர்வதை க்காட்டிய மணிக்கு யிலோசை
போற்றிசெ ய்கதிரவன் கீழ்த்திசை யணுகினன்
போறியுன் கோயிற் பணிலமு மொலித்தன்
போற்றுவ ம்புனிதரா ய்க்காரைய ம்பதியிற்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 01:* அடியார்களாகிய எங்களிற்கெல்லாம் அடைக்கலந் தருபவளாகிய தாயாரே! வணக்கம். விடிவதை தெரியத்தந்தன சேவல்களின் ஒலி. அழகிய குயிற் பட்சிகளின் சப்தம் விடியல் வெளிப்பதைக் காட்டின. எங்கள் தாழ்வு நிலைகளை அகற்றி அருள்க! உமக்கு வணக்கம்! சூரியபகவான் கிழக்குத் திசை அணைகின்றான், உமக்கு வணக்கம்! வணக்கம்! காரையம் பதியில் எழுந்தருளி இருக்கின்ற சிவகாம அம்மையாரே! யாம் ஆசாரசீலராய் வந்து வணங்குகின்றோம் நித்திரை நீங்கி எழுந்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 02

மறைந்தன மையிருள் புலர்கிற விடியல்
    உளந்தனி ல்நினைவுகளு ன்னிடமாயின
குறைபல இருப்பினுங் குணமெனக்கண்டு
    உளமதி லேற்று அடியவர் க்கருள
நிறைபுகழ் பண்டத் தரிப்பான் புலத்தில்
    உளமகிழ் வோடுறை ந்திருப்பவளே!
மறைபுக ழ்பேசும் மகேஸ்வர னிடத்தாய்
    சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 2:* நான்கு வேதங்களினாலும் போற்றப் படும் பெறுபவராகிய மகேஸ்வரரின் இடப்பாகத்தில் அமர்ந்தவளே! உயரிய சிறப்புக்களையுடைய பண்ட(ந்தரிப்பார்)த்தரிப்பான் புலத்தில் உள்ளத் திலே, சந்தோசத்தோடும், உயர்ச்சியோடும் இருப்பிடமாய் இருப்பவளே! கருமையான இருட் கூட்டங்கள் அகன்று விட்டன. காலை தெரிகின்றது. எங்கள் உள்ளங்களில் உங்களைப் பணிதல் வேண்டு மென்கின்ற எண்ணங்கள் நினைவாகிய அடியோம் என்ன தவறு செய்யினும் அவற்றைச் சரியென உமது இதயத்தில் ஏற்று, எமக்கருள் செய, சிவகாமித் தாயாரே! தூக்கங்கலைந்து எழுந் தருள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 03

மணியொலி செய்தனர் மறையவ ர்கோயில்
உளமகிழ் வோடுன் பணிக் காயினர்
மணியொலி கேட்டன, மாதவர் எழுந்தனர்,
உளமதில் ஓம்சக்தி நாமம்ப யின்றனர்
மணியொலி செவிப்புக மாந்தர்க ளெழுந்தோம்
உளமதி லுனதிரு பதமலர் நினைந்தோம்
மணியொலி கேட்டதும் வந்திக்க வந்தோம்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 03:* சிவகாமி அம்மையாரே! உன் சன்னிதானத்து வேதியர்கள், காண்டாமணியைச் சப்தித்தனர், சப்தித்து, உமக்கான கடமைகளைச் செய்வதாயினர். காண்டாமணியின் ஒலியானது கேட்டதும் தங்கள், தங்கள் இதயங்கள் ஆனந்த மடைந்து, உயரிய தபசிகள் எழுந்தனர். தங்கள் திருவாய்களால் ஓம் சக்தி! சிவசக்தி! சிவசக்தி என்கின்ற பெயர்களை ஓயாது உச்சரித்தனர் (மாந்தர்களில் உயரிய தவத்தை உடையவர்கள் என) மானிடர்களாகிய யாமும் எழுந்தோம், எழுந்து, உமது இருபாதகமலங்களை உள்ளத்தில் நினைந்து வணக்கஞ் செய்ய வந்துள்ளோம். துயி நீத்தருள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 4

அக்கும ணிபுனை, அன்பர்க ளோர் பால்,
 நிமலிநி ன்னருள்வே ண்டுவா ரொருபால்
நெக்கு நெக்குநி னைப்பவரோர் பால்
 நினைந்து மகிழ்ந்து கூத்தாடுவா ரோர் பால்
புக்குநி ன்கோயில் புரள்பவ ரோர்பால்
 நிறைய ழிந்துநி ற்பவ ரோர்பால்
பக்குவர்க்களுள் பண்ட பதியோய்
 சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 04:* மலமற்றவளே! உருகி, உருகி, உன்னை நினைப்பவர்கள், ஓர் பக்கலிலேயும், எண்ணி ஆனந்தமடைந்து, ஆனந்தக் கூத்தாடுவார் ஓர் பக்கலியும், உன் திருச்சன்னிதானத்தில் வந்து ஆனந்தக் களிப்பினால் உருண்டு புரள்பவர் ஓர் பக்கமாகவும், உன்மேல் வைத்த பக்தியினால் தங்களை மறந்து நிற்பவர் ஓர் பக்கமாகவும், உருத்திராட்ஷ மணிகளை உரிய உரிய இடங்களில் அணிந்து அன்பு செய்பவரோர்பால் உள்ளார்கள், அப்படியாக நல்நிலையுடையார் கருள் செய்வதற்கு பண்டத்தரிப்பான்புலத்துறை சிவகாமி அம்மையாரே! துயில் நீத்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 05

அண்டர்க ளருவமா யணியணி வந்தார்
ஓகையா லுன்புகழ் பேசுவார் வந்தார்
தொண்டர் கள்பணிபுரி தொழுதிட வந்தார்
தோகையர் மலர்கரம் பற்றியே வந்தார்
தண்தமிழ் த்திருமுறை ஓதுவார் வந்தார்
ஓம்சக்தி சிவசக்தி உரைப்பவ ர்வந்தார்
கண்டவர் களிப்புறு காரை புலப்பதியில்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 05:* தேவர்கள் நிரை நிரையாகத் தங்களை உருநிலையிற் காட்டாது உன்பதியில் வந்துள்ளார்கள். விருப்பத்தினால் உன் சிறப்புக் களைப் பேசுகின்றவர்கள் வந்துள். அடியவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கு வந்துள்ளனர். பெண் தொண்டர்கள் தங்கள் கைகளிலே வணங்கு வதற்காக மலரோடு வந்துள்ளனர். குளிர்மையான இனிமையுள்ள தமிழ்மொழியினாலான திருப்பாடல் களைப் பாடுபவர்கள் வந்துள்ளனர். உனது திரு நாமங்களாகிய ஓம்சக்தி, சிவசக்தி நாமங்களை சொல்லுபவர் வந்துள்ளனர். எனவே, பார்த்தவர் கள் சந்தோசமடையுங் காரையூர் பண்டத்தரிப்பான் (பண்டந்தரிப்பார்) புலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவகாமி அம்மையாரே! துயில் நீத்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 06

திருவடித் தாமரைத் தெரிசன ஞ்செய்ய
சித்தந்தெ ளிந்துன் கோயிலு ற்றோம்
திருக்கர த்தாமரைச் சிறப்பினைக் காண
சித்தர்கள் சொல்வழி சிறந்துநா ம்வந்தோம்
திருமுகத் தாமரை தெரிசித்து மகிழ்ந்து
சித்திபெ ற்றுய்யத் தேவிநாம் வந்தோம்
திருகலை நீக்கியுன் திருக்கொ டையருள
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 06:* தேவீ! உன் மலர் போன்ற திருவடிகளை வணங்குவதற்காக, உளம் மாசற்ற நிலையில் உன் சன்னிதி அடைந்துள்ளோம். உனது தாமரை மலர் போன்ற, உயரிய கரங்களின் அழகை சித்தர்கள் உபதேசித்தவாறு காண்பதற்காக, உனது கோயில் அடைந்துள்ளோம், உனது செந்தாமரை போன்ற திருமுகத்தைத் தரிசித்து, ஆனந்தமடைந்து, நல்ல பேறுகளை உங்களிடம் பெற்றுய்வதற்காக வந்துள்ளோம். எங்களுடைய மனக்குளப்பம், சிந்தனைக் குளப்பங்களை அகற்றி உனது நல்லருளைத்தர சிவகாமி அம்மையாரே தூக்கங்கலைந் தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 07

பூதலம், பாதலம், மேல்தல மெங்கும்
ஆதார மானாய் அகிலமு மீண்டாய்
சூதமுனிவ ர்சொற் பெருமை க்குரியோய்
ஆதரவற் றோர்க் கடைக்க லமானாய்
ஏதமில் லடியார் போற்றுத லேற்போய்!
ஆதங்கங் கெடுத்துஅவர்களைக் காப்போய்!
பூதல மாபதி பண்ட புலத்திற்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*வ்யா. உரை 07:* சூதமுனிவராற் பேசப்பெற்ற உயர்ச்சிக் குரியவளே! ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலம் அருள்பவளே! குற்றமற்ற அடியார்களின் வழிபாடு களை ஏற்றருள்பவளே! அவர்களின் அங்கலாய்ப்பு களையெல்லாம் இல்லாமலாக்கி அவ்வகை அடியார்களைக் காப்பாற்றுபவளே! பூவுலகு, கீழுலகு, மேலுலகு எங்கும் நிலையானவளே! அனைத்து உலகத்தவர்(துக்)கும் அன்னையான வளே! பூவுலகின் கண்ணே உயரியதாகிய பண்டத்தரிப்பான்புலத்தை இருப்பிடமாகக் கொண்ட வளே! நித்திரை நீத்தருள்வீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 08

அன்பொடு தும்புரு அருகினி லமைந்து
இன்புட னுன்புகழ் கீதங்க ள்பாட
இன்பொடு நாரதர் யாழினை மீட்டி
பண்புட னூனதிரு பதப்புக ளிசைக்க
கொன்பெறு நந்தீசர் மத்தள ம்போட
பண்புளோ ரவர்செய ல்கண்டு மகிழ்வாய்
அன்பர்கள் முறைசெய் யக்காரை ப்புலத்தில்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருள்வாயே!

*பொ.உரை 08:* தும்புரு முனிவரானவர் உன்மேல் அன்புகொண்டு பிரிவற்ற நிலையில் உனதருகி லமைந்து உனது சிறப்புக்களைப் பேசுவதாகிய பாடல்களைப் பாடவும், அப்பாடலை அனுபவித்து நாரதமுனிவரானவர் தனது யாழில் வாசிக்கவும், வலிமை பொருந்திய நந்தியம்பெருமான் இசை களிற்கேற்ப மத்தளங் கொட்டவும், நல்ல செயல்களைச் செய்பவர்களாகிய, அவர்களினது அன்பின் செயல்களைக்கண்டு ஆனந்தமடைபவளே! உனது இருப்பாகிய காரைபுலப்பதியில், அன்பர்க ளாகிய யாம், எங்கள் நிலைமைகளை உன்னிடங் கூறி நிற்கின்றோம், சிவகாமி அம்மையாரே! நித்திரை நீத்தருள்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 09

புலிமுனியும் பதஞ்சலியுங், காணம ன்றில்
நடனமிடு நடராச ன்பாகத்தாளே
நலிவுடை யசுரர்முனி வர்துன் பம்நீங்க
படையுடை யஅரக்கர்க ளைவதைத் தசக்தி
கலியுகத்தி ல்மாந்தர் படுந்துன் பம்நீங்க
படவரவா ன்சோதரி யேகோயில் கொண்டாய்
மெலிவுகொ ண்டுவந்து ற்றோம்பு லம்பதியில்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 09:* புலிக்கால் முனிவரும், பதஞ்சலி முனிவரும், காணும்படியாக கனகமன்றில் தாண்டவ தரிசனங் கொடுத்தவராகிய, நடனபதியின் இடப் பக்கம் உடையவளே! மகிஷாசுரனால் துன்புற்ற, மனிதர்களையுங், தேவர்களையுந் துன்பத்திலிருந்து நீக்குவதற்காக மகிடாசுரனை அதம்செய்து அவர் களைக் காத்தருளியவளே! இக்கலியுகத்திலே மானிடர்களாகிய யாம் படுகின்ற இடர்களை அகற்றுவதற்காக பண்டத்தரிப்பான் புலப்பதி கோயில் கொண்டவளே! ஸ்ரீ கண்ணபரமாத் மாவினது சகோதரியே! துன்பமுற்ற நாம் உன்பதியை அடைந்துள்ளோம். சிவகாமித் தாயாரே! உறக்க மகற்றுவீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 10

கொடிதென வந்தகரி தனையு ரித்து
    போர்த்தி யபரமன் பாதி யளே!
கடிதென வந்தபு லியினையு ரித்தரை
    சேர்த்தி யசிவனா ர்பணி பவளே!
மடிதனி ற்கனத்த பக்திசெ ய்யடியார்
    சேரிடங் காரைப் புலத் தாளே!
செடியுடை யிருவினை தீர்த்தெ மையாள
    சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 10:* தங்கள், மனங்களிலே உயரிய பக்தி செய்கின்ற பக்தர்கள் அடைகின்றதாகிய காரையூர் பண்டத்தரிப்பான்புலமதில் கோயில் கொண்டிருப் பவளே! கொல்ல வந்த ஆனை வடிவினனாகிய கயமுக அவுணைக்கொன்று, அவ்வானைத் தோலை தனது (அரை) உடம்பில் போர்த்தியவருமாகிய சிவபெருமானால் வணங்கப்படுபவளே! அன்று யாகத்தினின்று விரைவாக எழுந்து பரமசிவனாரை அழிக்க வந்த புலியினைக் கொன்று, அதன் தோலை அரையின் கண்ணே உடுத்தவராகிய பரமபதியின் இடப்பாகத்தமர்ந்தவளே! பற்றிப் படருஞ் செடியினைப் போன்று நங்களைப் பற்றி வந்ததும், வந்து பற்றிக் கொண்டிருப்பதுமாகிய, இருவினைப் பகைளை அழித்தாழ்வாயென உன்பதி அடைந்தோம். சிவகாமி அம்மையாரே! தூக்கங்கலைந்து எழுவீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 11

கடிதென வந்த மறலியை யுதைக்க
விருப்பொ டுனதுதிட ப்பதங், கொடுத்தாய்
கொடிய வனான மகிடனை யன்று
கறுப்புட னொருபதம் ஊன்றி யழித்தாய்!
படிதனில் சீர்காழி ச்செல்வ னுக்கன்று
களிப்புட ன்திருமுலை ப்பாலினை க்கொடுத்தாய்
அடிகளை ப்பரவப் புலப்பதி உற்றோரும்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ. உரை 11:* யமராசனானவன் மார்கண்டேயருடைய உயிரை வவ்வுதற்காக மிகவும் விரைவாக வந்த போது, அந்நமனாரை, சிவபெருமானானவர் தனது இடது காலினால் உதைத்துத் தடுத்தருளினார் அப்போது (இடது பாகத்திலிருப்பவளாகிய உனது காலினாலேயே உதைத்தார்) அப்படியாக உயிர் களிடத்து இரக்கமுள்ள தாயாரல்லவா நீ! தேவர்க்கெல்லாம் பெரிய தீமைகளைச் செய்து வந்த (எருமைத்தலை) மகிஷாசுரனை, மிகவுங் கோப முற்றவளாகிய உனது ஒரு பாதத்தால் மித்து உயிர்மாய்த்த தாயல்லவா நீ! பூவுலகத்திலுள்ள சீர்காழிப்பதியிலே அவதரித்த திருஞானசம்பந்தருக்கு உனது திருமுலைப்பாலை பொற்கிண்ணத்திலேற்றுக் கொடுத்ததாயல்லவா நீ! இப்படியான சிறப்புகளையுடைய தாயென நம்பி உனது திருப்பாதங்களை வணங்குவதற்கு, பண்டத்தரிப்பான்புலப் பதியில் உற்றுள்ளோம் சிவகாமித் தாயாரே! துயில் எழுந்தருள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 12

விண்ணக த்தேவர்கள் வேண்டுத ற்கரியாய்
வேதநாய கியுன்வி ருப்பின் படியே
மண்ணக த்தேவந்த மானிடப் பட்டர்
வேண்டுத ல்கேட்டு நிலாவொ ளிசெய்தாய்
அண்ணலி ன்பாகம் அமரபிராமி
வேண்டுதல் செய்தோம் வேலைசூ ழ்புலத்தில்
பண்டுனை க்கந்தர் பரவு குற்றாய்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ. உரை 12:* வானத்துறை தேவர்களாலும் பணிவதற்கரியவளே! முன்னொருகால் கந்தப்பர் என்பவரின் வேண்டுதலுக்கிணங்கி, பூவுலகின் கண்ணேயுள்ள பண்டத்தரிப்பான்புலப்பதியில் அந்த அடியவர் வணங்குவதற்காகக் கோயில் கொண்டு அமர்ந்தாய் முன் செய்தவ வலியால் பூமியின் கண்ணே தோன்றிய அபிராமிப்பட்டருக்கு, அவருடைய வேண்டுதலுக்கிணங்கி, உனது தாடகம் வீசி நிலாவெளியைக் காட்டினாய் (காட்டியவளே) அடைக்கலநாதனின் இடப்பாகம் அமர்ந்தவளே! அபிராமித்தாயாரே! சிவகாமி அம்மையாரே! நித்திரை விட்டெழுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 13

கைப்போது மலர்தூவிக்காதலிக் குமன்பினர்க்கு
எப்போது மினியாளே! எல்லோர்க்கு
ம்பணியாளே!
முப்போது ந்திருமேனி தீண்டுவார் பூசனைகள்
தப்பாது ஏற்றருள்செ ய்தளர்விலா மனத்தாளே!
வெப்போடு மன்னவன் பால்மேவிநின் றசுரநோயை
அப்போத கற்றுதற்கு ஆளுடையபி ள்ளை
தந்தாய்
இப்போது சிரங்கூப்பி யுன்பதியில் நாமுற்றோம்
சிவகாமி யேபள்ளி எழுந்த ருளாயே!

*பொ.உரை 13:* அடியார்கள் தங்களது தாமரை போன்ற கரங்களிலே மலர்களை எடுத்து அன்பு செய்து பூசனை செய்ய, அவ்வாறான அன்பினர் களுக்கு சதாகாலமும் அன்பு செய்பவளே! ஏனைய அடியார்களிற்கும் உன் கடமைகளை அவரவர்க் கேற்றவாறு செய்பவளே! முக்காலங் களிலும் உனது திருமேனியில் அபிஷேகம், அலங்காரம் (அர்ச்சினையுமாம்) செய்வதற்காக தீண்டுகின்றவர்களாகிய மறையவர்களின் செயல் களை, உவந்து(நீக்காது)ஏற்றருளுகின்ற குறைவற்ற மனம் (அன்பு) உடையவளே! பாண்டியமன்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிடத்து கொடிய சூடாகிக்கலந்திருந்த காய்ச்சல் நோயை அரசனிடத்திலிருந்து நீக்குவதற்காக, உனது குமாரனாகிய கந்தக் கடவுளை, பூமியில் ஞானசம்பந்த(ப்) பிள்ளையாக அவதாரஞ் செய்ய வைத்து, அந் நோயை அகற்ற அருளியவளே! நின் உறைபதியாகிய பண்டத்தரிப்பான் புலத்தில் கரங்களை சிரத்தில் உயர்தியவாறு உறைந் துள்ளோம். சிவகாமித் தாயாரே! நித்திரை நீக்கி எழுக!

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவகாமி அம்மை பதிகம்

## பாடல் 01

எங்கும லைந்துலையு நீதில்லையா ன்பங்காளே!
    எங்கும் நீயுலை ந்திடாது
எங்குந் தெரியுவெளி வீரியன்புல மண்ணில்
    ஏந்திழை சே(து)தா ளிடம்
எங்குண்டு கந்தனில்? ஏனவினிவி யம்மநீ
    கோயிலெள நினைவு செய்தாய்
எந்தனதுதுயர் துடைத்த ருளுவாய்சி தைவின்றி
    அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 01:* ஓரிடமின்றிப் பலபல இடங்கள் தோறும் அன்பர்கட்கு அருட்கொடை வளங்குவதற் காகவும், பிச்சையெற்றும் உலைகின்றவராகிய தில்லைநடராசப் பெருமானாருடைய இடப்பாகத்தி லிருப்பவளே! எத்திசையினுமிருப்பவர் கட்கெல்லாந் தெரிந்து திருப்பதாகிய (அன்னை கோயில் கொண்டிருக்கும் மேற்றிசைப்பக்கமாக உள்ள "காரைப்புரியல்" என்று தற்போது பேசப்படுகின்ற பெருங்காணியாகிய" வீரியன்புல(க்) காணியில் "கையில் அனலேந்தி, தலைவிரி கோலத்துடன் உக்கிரமாய்" அடைந்து, அங்கு நின்றவராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“புன்னர்கந்தர் மகள்” சேதுப்பிள்ளை என்பாளிடங் கந்தன் என்பவரின் வீடு எங்கே?யென்று வினாவி உன்கோயில் எள நினைவூட்டினாய்! இப்படியாகப் புதுமை செய்து கோயில் கொண்ட சிவகாமி அம்மை யாரே! அடியேன் நல்நிலையில் “உன் நினைவாக” வாழ்வதற்கு கிருபை செய்யும்.

## பாடல் 02

அலையாழி சூளுலகில் அடியனேன் படுந்துயர்
உன்கணி ற்தெரிய விலையோ?
அன்னையென் றுன்பதியில் வந்துயான்பணி
செய்தல்
அம்மா!நீ ஏற்க விலையோ?
அன்பர்கள் செய்பணி களேற்றுநீபு லப்பதியில்
உதவியது ம்பொய் மைதானோ?
அவினாசி யப்பனிடப்பாகத்த மர்ந்தருளும்
அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 02:* அவினாசி என்கின்றதாகிய திருத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்றவராகிய அவினாசி அப்பனோடு, பாகம்பியாளாய் உடனிருந்து அடியார் களை ஆட்சி செய்கின்றவளாகிய அன்னை சிவகாமி அம்மையாரே! அலைமோதுகின்ற, கடலினாற் சூளப்பட்ட இந்தப் பூவுலகில், உன் அடியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற துன்பங்கள், உனது கண்களிற் தெரிய வில்லையோ? யான் உன்னை என்தாயென நினைந்து உனது இடத்தில் சேர்ந்து, என்னாலான பணிகளைச் செய்வது உனக்குச் சரியெனப்பட வில்லையோ? முன்னமே உனது பல அன்பர்கட்கு கனவிலும், நினைவிலும் உதவியமையும் பொய் தானோ? ஆண்டருள் சிறியேனை.

## பாடல் 03

ஆதியில் வந்ததும், வருகின்றவ ல்வினையும்
அடியேனை வருத்து தம்மா!
ஆதியில் சண்ட முண்டரைச் சங்கரித்(து)
அன்பர்களை ஆட்சி செய்தாய்
ஆதியில் பண்டபதி யமைந்து கந்தப்பர்க்
கருளினாயு ன்னடிமை யான்
ஆதியார்சி தம்பரேஸ்வ ரர்பாக முறை
அன்னை சிவகாமி உமையே!

*பொ. உரை 03:* மூலமும் முடிவுமில்லாதவராகிய சிதம்பரநாதருடைய வாமபாகத்திலமர்ந்துள்வளா கிய, உமையெனும் நாமங் கொண்ட சிவகாமித் தாயாரே! முன்னமே இவனோடு கூட வந்த வினையும், வரப்போகின்றதுமாகிய கொடியவினை யும், சிறியேனை துன்புறுத்துகிறதம்மா, முன்னொரு கால் யாவர்க்கும் இடுக்கண் செய்த சண்ட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டர்களென்கிற அவுணர்களை இல்லா தொழித்து, துன்புற்ற அன்பர்களைக் காவல் செய்தாய். முன்னமே, பண்ட(ந்தரிப்பார்)த்தரிப்பான் புலமமைந்து, உனது அடியவராகிய கந்தப்பருக்கு பல்வகை அருளிப்பாடு செய்தாய். இவற்றையெல் லாம் மனதிற் கொண்டு, உமதடிமை, உன்னிடத் தில் அடைக்கலமாகியுள்ளேன் ஆண்டருள்வீர்.

## பாடல் 04

இன்னலுற் றடிமையுன் பாதகம லங்களை
    இறுகப்பி டித்துநி ன்றேன்
இன்னமு ம்பராமுக ஞ்செய்யா திவன்பணி
    ஏற்றிடு வதெக் காலமோ?
இகழ்ந்திவனை ஒதுக்குவது இழிவல்ல வோவுன
    இறைவனுடனி சைந்த ருள்செய்
இகபரசு கம்பெறஎ ல்லோர்க்கு மருளிடும்
    அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை04:* மண்ணிலும், விண்ணிலும் நல்லபடியாக வாழுமாறு சகலருக்கும் அருள்புரிபவளாகிய உமையவளே! உனதடிமையாகிய இவன் துன்புற்ற நிலையில் உனதிரு பாததாமரைகளை பற்றிப் பிடித்து நிற்கின்றேன். மேலும் பராமுகஞ் செய்யாது, இவனால் செய்யப்படுகின்ற தொண்டுகளை ஏற்றுக் கொள்வது. எப்போதோ? அப்படி ஏற்காது இழிவு செய்து இவனை ஓர் புறந்தள்ளுவது உனக்கு அழகாமோ? இல்லை! சிதம்பரேஸ்வரப் பெருமா னுடன் கூடவே நீ அருள் செய்ய வேண்டு(ம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றேன். இம்மையிலும், மறுமையிலும் உமதடியார்கள் நலம் பெற அருள்புரியும், தாயே! உமையே! சிவகாமி அம்மா!

### பாடல் 05

ஊசலிடு முயிர்கட்கு உறுதுணையா ய்நின்று
    ஒளிர்பவ ள்நீய ல்லவோ
ஊழ்வினை வலியினா லிவன்படு ந்துன்பங்கள்
    எள்ளள வுமறிந்த திலையோ?
ஊழ்வினை கெடுப்பது னக்கருமை யல்லவே
    ஓதுவா ர்க்கருப வள்நீ
ஊர்திபசு வுடையானி னுள்ளங்க வர்ந்தவென்
    அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 05:* வெள்ளை எருதை வாகனமாகக் கொண்டவனாகிய பரமசிவனாரினது மனதைக் கவர்தவளே! அவலநிலையிலுள்ள உயிர்கட்கு, உற்ற துணையாக நின்று, விளங்குபவள் நீயல்லவோ? ஊளின் வலியினால் உன்னடியவன் படுந் துயரங்களை, எட்பிராமணமாவது நீ தெரிந்திலையோ? பக்திமார்க்கத்தில் உரிய வளி நின்று உனது நாமங்களை உச்சரிக்கின்ற அடிமைகட்குக் கருணை காட்டுபவளும் நீ யல்லவோ? அப்படியான செயல்களையெல்லாம் செய்கின்ற உனக்கு, இவனுடன் வந்த ஊழ்வலியைக் கெடுப்பது உனக் கருமையோ? உமையே! சிவகாமி அன்னையாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 06

சுந்தரியெ னுநாமம் சொல்லிடும் போதிலே
    சுகம்பல தோணு தம்மா!
சௌந்தரி யெனுநாமஞ் சாற்றிடு ம்போதிலே
    சஞ்சல மகலு தம்மா!
நிரந்தரி யெணுநா மம்நினைந்தி டும் போதிலே
    நீங்குதே வினைக ளம்மா!
அரந்தை கெடப்பு லத்துறை ஆதியே! சோதியே!
    அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 06:* மிகவும் அழகானவளே! (சுந்தரி) என்கின்ற உனது திருநாமத்தை அடியவர்கள் பேசும் வேளைகளிலே, அதிக சுகம் பெறுகிறார்கள் தாயே! அலங்காரப்பிரியை (சௌந்தரி) என்கின்ற உனது திருப்பெயரை உச்சரிக்கும் வேளையிலே, அடியார்களின் அவலநிலைகள் அகன்று போகிறது தாயே! உனது என்று முள்ளவள் (நிரந்தரி) என்கின்ற பெயரை மனதில் நினைக்கும் வேளையிலே, அடியவர்களுடன் வந்ததும், வரவிருக்கின்றதுமாகிய வினைகள் அவரிடத்தி லிருந்து விலகிடுது தாயே! இப்படியாக, உயரிய அன்பு செய்கின்ற அன்பாளர்களினது துன்பங் களைக் கெடுப்பதற்காக பண்டத்தரிப்பான்புலக் கோயிலில் எழுந்தருளியிருக்கிறவளாகிய மூலப் பொருளே! விளங்கொளி யாயிருந்தாட்சி செய்பவளே! யாவர்க்குந் தாயாயுள்ளவளே! உமை யெனும் உயரிய திருநாமத்தை உடையவளே! இவனையும் பார்த்திடம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 07

ஒன்றல்ல இரண்டல்ல உன்நாம முரைப்பதற்கு
ஓராயிர நாம முடையாய்
ஒன்பதொ, டொன்றொடேழு, பதினெட்டொ, டாறும்
உன்நா மமோத வோடும்
ஒன்றாகிப் பலவாகி, உடலகெலா ம்நீயாகி,
ஒளிர்கின் றாய்புலப் பதியில்
கன்றிடும் டியனைக்கா த்திடுத லரிதோ?
அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 07:* உமையெனும் உயரிய நாம முடையவளே! உன் பெயர்களோ பேசுவதற்குப் பலவுண்டு நீ ஆயிரம் நாமங்களிற்கு மதிக பெயர்களையுடையவள் அல்லவோ? இப்படியாகப் பற்பல பெயர்களையுடை அன்னையே! இவ்வாறாய நாமங்களில் உனது ஓர் நாமமாகிய ஓம் சர்வ சக்தி எனும் நாமத்தைச் சிறியேன் உரைத்தலும், "ஒன்பது கிரகங்கள் - விதி என்கின்ற ஒன்று ஏழு நாட்கள், 12 மாதங்கள், 12 இராசிகள் மறைந்து விடுமென்பர்!" சிறியெனிடமிருந்து விலகிடாதோ? ஒன்றாகியும், பலவாகியும் விளங்குகின்றாய் உனது மார்த்திரமாகிய பண்டத்தரிப்பான் புலத்தில். இப்படியான உனக்கு, வேதனையுற்றிருக்கின்ற உனது அடிமையைக் காப்பாற்றுதலரிதோ? சிவகாமி அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 08

ஈராறுக ரமுடைய பிள்ளையை த்தந்துநீ
இமையவ ர்துயர் துடைத்தாய்
ஈரேழுலோ கங்கைளெங் குமாய்நி றைந்துநீ
எல்லோர்க் குமருள் சுரந்தாய்
ஈனனாமிவ ன்பணிஏ ற்றமில தாயினும்
ஏற்றரு ள்செய்கா ரைபுலத்தோய்!
ஈசனுடன் நடமாடு ஈஸ்வரி கருணாகரீ,
அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 07:* பன்னிரண்டு களைகளையுடயவரா கிய சண்முகக் கடவுளை உதவி, தேவர்கள் துன்பங்களை நீக்க அருளினாய்! பதினான்கு உலகங்களிலும் பரவி உறைந்து சகல ஜீவராசி கட்கும் உனது கருணை கடாட்சத்தை நல்கினாய்! எளியவனாகிய இவன் பணிகள் சரியற்றன. (உயர்வற்றன) ஆயினும் ஏற்றருள் செய்வீர் காரை புலம்பதி உற்றவளே! சர்வ வல்லமையு முடையவரும், சர்வலோக அதிபதியாயிருப்பவரு மாகிய சிவனாருடன் தாண்டவமாடிய, காழியம் மையே! கருணாகரியே! சிவனாருடனுற்று உமையெனும் நாமங் கொண்டவளே! சிவகாமி அன்னையாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 09

ஐயமேற் றூரூராய் அலைந்துதி ரிசிவனார்க்கு
ஆதார மான சக்தி
ஐயினால் மிடறடை த்தாக்கை விட்டு
ஆவியார்பி ரிகின்றபோ திலுன்னை
கையினால் தொழுமறிவு தந்திவனை ஆளுவாய்
காலனையுந் தடுத்து தவுவாய்
மையானா ருடனுறை மகேஸ்வரீ! மால்தங்கா!
அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 09:* திருநீலகண்ட சிவனாருடனுறையும் மகேஸ்வரி! ஊரூராய் பிச்சையேற்றுத் திரிந்த (திரிகின்ற) பிட்ஷாடனமூர்த்திக்கு ஆதாரமாயுள்ளாளே! சளி (சேடம்) விகுதியினாலே தொண்டையானது அடைபட்டும் அந்தவேளையிலே "உடலை நீத்து உயிரானவர்" பிரிவர். அப்போது உன்னடிமையாகிய இவனது இருகரங்களையும் சிரசில் கூப்பி உன்னை வழிபடுகின்ற அறிவுதந்து, யமனையும் (பயஞ்செய்யாதே!) இவன் என்னடியவனென்று தடுத்தருளுவீர். திருமாலின் தங்கையே! உமையெனும் நாமமுடையாளே! என் தாயாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 10

உலகெலா மொளிர்ந்து நின்ஆட்சியைச்
செய்கின்றாய்
ஊழனை யாழ்வ தெப்போ?
உலகினி லிவன்போல உகப்பிலா வொருவனை
ஊழ்வளி யேற்ற ருளுவாய்
உமதடியார் பரவநல் பண்டபதி யிலுற்ற
உத்தமீ! சக்தீ! நீலீ!
உளமகிள சிதம்பரேஸ்வரு டனுறையும்
அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை 10:* உமதடியவர்கள் வழிபாடியாற்றுவதற்குரிய இடமாகப் பண்டத்தரிப்பான்புலப் பதியில் உறைந்தருளும், சிறப்புடையவளே! வலிமையுள்ளவளே! சகல உலகங்களிலும் பரந்து நின்று, உனதருளாட்சியைச் செய்கின்றாயம்மா! உழ்வலி இயங்குகின்ற இவனை ஆட்சி செய்வதெப்போ? இந்த உலகத்தின் கண்ணே இலனைப் போல் விரும்பத்தகாதானை, ஊழ் நீக்கி ஆட்சிப் படுத்தும்மா! உமது மணாளனாகிய சிதம்பரேஸ்வரப் பெருமானோடு உனதுள்ளம் மகிழும்படியாக அமர்ந்தவளே! உமையெனும் உயர்ந்த பெயரை உடையவளே! அன்னை சிவகாமியே! நீலவண்ணன் சோதரியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 11

ஏதுமறியா ஏழைஇவ னிடத்த ன்பின்றி
  இருப்பது உனக்க ழகாகுமோ?
ஏதுபிழை செய்தாலு மிவன்செயல் பொறுத்துநீ
  இசைந் தருள்செய் யுமம்மா!
ஏழையுட ன்கந்தப்ப ர்மகவுதர வேண்டுமென
  இசைந் தருள்செய் தசக்தி
ஏதிலார் போற்றிடக் காரைபுலப் பதியுறை
  அன்னை சிவகாமி உமையே!

*பொ.உரை: 11* நன்று தீதறியாத (உன்னை வழிபடுவதற்குரிய வழிகளை) அறியமுடியாதிருக்கின்ற இவனிடத்தில் அன்பில்லாதிருப்பது உனக்கழகாகுமோ? எவ்வகையில் தவறு செய்யினும். இவனியற்றுந் தவறுகளைப் பொறுத்து, இசைவுடன் உனதருளைத் தாருமம்மா! ஆதியில் கந்தப்பர் என்னும் உமதடியவர், தனது மனையாளுடன், (சிதம்பரத்தில்) குழந்தைப்பேறு வேண்டி நிற்கையில் **"பிள்ளையுந் தந்தேன் என்னையும் வைத்திரு கந்தப்பா!"** எனக் கனாவிற் கூறி அவருடைய வேண்டுதலை ஏற்றருளிய சக்தியல்லவோ? அன்னையே! சிவகாமியே!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் பண்டத்தரிப்பான்புலமுறை

# சிவகாமி அம்பிகா சமேத
# ஸ்ரீ சிதம்பரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
# "உபசிதம்பரம்"

## எழில் மிகு தோற்றம்

திருமொழி அச்சகம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org